466

OFFICE OF ... 17 JAN ... MADRAS

ஓம்.

சத். ஸத்.

தேவாரநகரம் சுத்தாத்வைதி

அருட்கவி

ஸ்ரீ விலக்ஷணானந்த சுவாமிகள்

அருளிச்செய்த

# ஹிந்துமதஸ்தாபனம்

இஃது

மதுரை மேலமாசிவீதி 121 நிர். வீட்டுக்குடைய

**பா. அ. இராமசாமி பிள்ளையால்**

**மேலே கண்ட ஸ்ரீ விலக்ஷணானந்த சுவாமிகள்**

உத்திரவுப்படி வேதாச்சாரங்களும் கடவுள் பக்தியும்

பரவச்செய்ய எண்ணங்கொண்டு இப்

புஸ்தகம் அச்சடிக்கலானது.

மதுரை

மதுராம்பிகா அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

**1927** [அணா 2

Q2
N27
178405

629
994.5
OFFICE OF THE ... 17 JAN 1928 MADRAS

ஓம்.

தத். ஸத்.

தேவாரநகரம் சுத்தாத்வைதி

அருட்கவி

ஸ்ரீ விலக்ஷணாநந்த சுவாமிகள்

அருளிச்செய்த

# ஹிந்துமதஸ்தாபனம்.

இஃது

மதுரை மேலமாசி வீதி 121 நிர். வீட்டுக்குடைய

**பா. அ. இராமசாமி பிள்ளையால்**

மேலேகண்ட ஸ்ரீ விலக்ஷணாநந்த சுவாமிகள்

உத்திரவுப்படி வேதாச்சாரங்களும் கடவுள்

பக்தியும் பரவச்செய்ய எண்ணங்கொண்டு இப்

புஸ்தகம் அச்சடிக்கலானது.

மதுரை

மதுராம்பிகா அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

இதன் விலை] **1927.** [அணா 2

ஓம்.

தத். ஸத்.

போது.

அமெரிக்கநாட்டுப்பாதிரிகள் அடியோடிந்தியாவிலுள
நமதுமதத்தைக்கிருஸ்தவமாய்நாட்டப்போகின்றார்களதை
இமையளவுந்தானிற்காமலேகிவிடவுநமதுமத
முமையொருபாகனருளாலே யோங்கிவளரவுன்னுவமே. (1)

போது.

இந்தியாமுழுதுமீச னிந்துமாமதத்தைப்போதித்
தந்தமாமேற்குநாட்டாரஞ்சிடச்செய்துவைப்பாம்
பந்தமாமதத்திலாழ்ந்து பருகிடுமறிவிலோர்க்குச்
சொந்தமாம்புத்தியது சொல்லுவீர்சுகத்தினோரே. (2)

போது.

இடமும்பொருளுமேவலுட னினிதாய்க்கொண்டு இந்தியரை
அடமேயாகக்கிருஸ்தவத்தி லாக்கவேண்டி அமெரிக்கர்
திடமேகொண்டுவருகின்றார் தேவேசனக்குத்தெரியாதோ
கடமையெதுவோவதைச்செய்வாய் கண்ணிலொழுகுங்கண்ணீரே

போது

மதமேநமக்குஆதாரம் மதத்தைவிட்டாற்கதியிலையே
அதையேதொலைக்கவருகின்றார் அமணர்போலவன்னோர்கள்
சிதையாவண்ணஞ்செய்திடுவாய் தேவேதெய்வநடத்தரசே
நிதமேநினக்குஆளாவோம் நேயங்கடந்தநித்தியத்தே. (4)

போது.

உடைகோவணமுமுண்ணிலையு முறங்காப்பொருளுந்துணைகொ
நடையேதுரியநளினநிலை நனவிற்சுழுத்திநாட்டமதாய் [ண்டு
இடையில்வந்தஇவ்வுலக மெனக்குவேண்டாமென்றிருந்தால்
தடையாய்வந்துதான்முளைக்கத்தானென்செய்வேன்றற்பரனே (5)

### திருஞானசம்பந்தர்.

மேற்குநாட்டுப்பாதிரிகள் மேலேயெழுந்துநம்மதத்தை
யேற்கச்செய்யப்போகின்றா ரென்னேசெய்வாரிந்தியர்கள்
சர்க்கையில்லாப்பெருமானே சீகாழிக்கேயுடையானே
மார்க்கங்காட்டவருவாய்நீ மன்றாணடனமிடுமாசே. (6)

### மணிவாசகப் பெருமான்.

புத்தரவாதில்வென்ற புண்ணியாநினக்குச்சொல்வேன்
எத்தனைநாளாயிந்த இந்தியர்படுவார்கஷ்டம்
சத்தியம்நீயேவந்து சார்ந்திடிற்பறக்குமென்றே
நித்தியந்தியானஞ்செய்ய நேர்படவருள்செய்வாயே. (7)

### ஸ்ரீ கண்ணபிரான்.

புல்லாங்குழலையுறவூதிப் புவியிற்பிறந்தமணிவண்ணா
எல்லாநாடுஞ்செழித்திருக்க இந்தியாதானிக்கோலம்
பொல்லாவினையோபுகழிலையோ பூர்வவினையோவென்னேயோ
சொல்லாயெனக்குவுள்ளுளவைச் சொன்னாலறிந்துகொள்வேனே

### இராமானுஜர்.

கடநாடதனிற்த்தர்தம்மை வலிபால்வென்றவுடையவரே
மடமேகொண்டுநம்மையெல்லா மயக்கிவிடவேவருவாராம்
இடமேதென்றுபோதித்து எங்கும்பரவச்செய்திடுவோம்
கடிமாமலர்சூழ்கற்பகத்தான் காட்சிகொடுக்குங்கதிர்மலையே. (9)

### சங்கரர்.

புத்தர்கள்சமணர்தம்மை போரிலேவென்றதீரா
இத்தனைநாட்களாயும் எங்குநீயொழித்தாய்கொல்லோ
சத்தியம்வந்தேதீர்ந்து சாதிப்பாய்சங்கராநின்
த்தியேகுடிகொண்டிந்தப் பாரதநாட்டிலம்மா. (10)

ஓம். தத். ஸத்.

ஓம்

தத். ஸத்.

நூல்

# ஹிந்து மதஸ்தாபனம்.

பாரதநாட்டுச் சகோதர சகோதரிகளே!

ஆர்ய மதாபிமானிகளே!

இயற்கை அறிவுபொருந்திய ஹிந்து மதஸ்தர்களே!

நமது ஹிந்துமதத்தில் யார் எந்தக்காலத்தில் எந்த விஷயத்தை எப்போது எவ்விடத்தில் ஆரம்பித்தாலும் முதலில் சர்வலோக சரண்யராகிய பகவானது மங்களங் கூறுவது அநாதி தொட்டுப் பழக்கமாக வந்திருக்கிறது. ஆதலால் நானும் இந்த நூலின் ஆரம்பத்தல் பரமாத்மாவின் ஸ்தோத்திரம்கூற ஆரம்பிக்கிறேன்.

## பரவஸ்துவின் வணக்கம்.

நித்திய சுநந்த சம்மத சாஸ்வத புத்தசைதன்ய சுதானந்த நிருமல நிராகார பராபர பரஞ்சோதி வடிவ நிருவிகற்ப அத்வைத அநாமய அகண்டநிலய அந்தரங்க பாமாத்ம வஸ்துவின் சச்சிதானந்த பாதங்களை வேற்றுமையில்லாத அபேத பக்தியினுல் ஸ்தோத்திரம்செய்து ஹிந்து மதத்தின் ஹிதத்தின் பொருட்டு இந்தச் சாஸ்திரத்தை எழுத ஆரம்பிக்கிறேன்.

## பர நிர்ணயம்.

அனுதியாய், சுயம்புவாய், துவைதமற்றதாய், சுயம்பிரகாசமாய், சர்வவியாபகமாய், சர்வக்ஞ சுதந்தரமாய், நிச்சலமாய் ஆதிகாரண வஸ்துவாய், பரம்பொருளாய், சச்சிதானந்த வடிவாய், தத்பொருளாய், நிரந்தரமாய் இராநின்ற பரமாத்மா ஒன்றுண்டு. அதுதான் ஜெகத்காரண வஸ்து.

## சிருஷ்டி

பரம்பொருளின் நிச்சலத் தன்மையின் அனுதி சங்கற்பவாசனு பலத்தால் மாயாசலனமும், அதனுல் பிரகிருதியும், அதில் முக்குணங்களும், அக்குணங்களால் மூன்று மூர்த்திகளும், முத்

தொழில்களும், சூக்ஷ்ம பஞ்சபூதமும், ஸ்தூல பூத விகாரங்களும் ஜீவசைமயோக சரீரங்களும் விஸ்தாரமான அண்டங்களும், விசாலம்பொருந்திய புவனகோளங்களும், எண்பத்துநான்குலக்ஷ யோனிபேதங்களும், பிரபஞ்சமும், பெரியமகத்தான மலைகளும், அகண்ட ஆறுகளும், சாதன வர்க்கங்களும், தோற்ற விகாரங்களும் உண்டாயின. இவை உலகல்.

### பிரபஞ்சம்

மனோவாக்குக் காயங்கள் சதா தொழில் செய்து கொண்டிருப்பதற்கேற்ற தோற்றமான இடத்திற்கே பிரபஞ்சமென்று பெயர் தூக்கம், விழிப்பு, கனவு இவைகளும் ஆத்மாவினால் தோற்றம் செய்கிறபடியால் இதுவும் பிரபஞ்சமே. இத்தகைய அபாரமான பல பிரிவுகளோடு கூடிய பிரபஞ்சத்தில் கடவுளை அறியவேண்டியதின் சாக்ஷியான ஞானசாதனமான நாடு ஒன்றுண்டு. அவற்றை விதிமுறையுடன் கூற ஆரம்பம்.

### பாரதநாடு

கடவுளைக் கண்டுபிடிக்க வேண்டியதற்கு மனோ சுத்திசெய்ய வேண்டியது அவசியம் மனோசுத்திக்கு இயற்கையான குணம் பிரதிபலித்து திரவேண்டும். அதற்கு சுத்த சத்துவம் நிறைந்த அபிப்பிராயம் நினைப்பு பாவனை பயன் செய்கை பழக்கம் கொள்கை மதம் ஆகாரம் நடை உடை சேர்க்கை பேச்சு பார்வை அந்தஸ்த்து கீர்த்தி உண்மை சாஸ்திரம் ஆசை உணர்ச்சி முயற்சி இவைகள் முழுதும் அடங்கியுள்ளதும் இவைகளை எல்லாம் அனுபவத்திற் காட்டக்கூடியதும் அனுஷ்டித்துக் காண்பிக்கிறதும் நமது ஹிமாலய சேதுபரியந்தமான பாரத நாடு என்பதை மறுப்பர் ஒருவருமில்லை. இந்த நாட்டில் பல பல பாகமான தேசங்களிருக்கின்றன. சிவாலய விஷ்ணுவாலய பிரம்மாலயங்கள் கணக்கற்றிருக்கின்றன. பிரம்மரிஷிகள் மஹரிஷிகள் முனீஸ்வரர்கள், முனீந்திரர்கள், ரிஷீஸ்வரர்கள். யோகீஸ்வரர்கள், யோகீந்திரர்கள், சித்தாதிகள், சித்தர்கள், மகான்கள், மேதாவிகள் பண்டிதர், ஞானிகள், முமுக்ஷுக்கள், அவதார புருஷர்கள் இவர்கள் காலத்திற்கேற்றபடி பாரத பூமியில் அடிக்கடி

தோன்றித்தோன்றி மறைந்துவிடுகிற வழக்கமாயிருந்தது. இந்த நாட்டில் அநேக ஏகாந்தமான மலைக்குகைகள் வனாந்தரங்கள் சோலைகள் சமுத்திரச்சார்புகள் சீர்பெற்ற ஆற்றோரங்கள், பரம ஆசிரமங்கள் மடங்கள் தேவாலயங்கள் முதலியன அளவிறந்துள்ளன. மற்றைய கண்டங்களில் கருமயோக பக்திசார ஞானசம்மதமான சாதன வர்க்கங்கள் யாதொன்றுங் கிடையாது. தேவலோகம் பிரம்மலோகம், பிதுர்லோகம் முதலிய லோகாந்திர மனுஷ்யர்களும் மீளாத முக்தியையடைய வேண்டுமானால் நமது பாரத புண்ணிய பூமியில் பிறந்துதான் ஆகவேண்டுமென்று **ஸ்ரீ கிருஷ்ணபகவான்** வற்புறுத்திக் கூறியிருக்கிறார். மற்றைய கண்டத்தார்களுக்கு ஞானமில்லையென்று இதனால் தாத்பரியமில்லை. பாரத நாடுபோல அவ்வளவு இல்லையென்பது மாத்திரமேதவிர ஏகதேசமாகமட்டும் மற்றைய நாடுகளை ஒப்புக் கொள்ளலாம். நமது கண்டம்போல மற்றய கண்டங்கள் மதவிஷயத்தில் ஈடு கொடுக்க முடியாது. இந்த நாட்டில் பல பிரிவுகளான மதங்களிருப்பினும் பொதுவாக நோக்குங்கால் **ஹிந்துமதம்** என்றும் பெயர். இந்தப் பெயரும் கூடிய காலத்தில் ஏற்பட்டதாகும். ஜெகத்ரக்ஷக சைதன்ய பரமார்த்த பிரம்ம வஸ்துவைத் தரிசித்து சர்வதுக்க நிவர்த்திபெற விரும்பும் ஜீவர்கள் அடையவேண்டிய மதம் நமது ஹிந்து மதமென்பது அன்னிய கண்டங்களிலுள்ளவர்களும் நம் கண்டத்தார்களும் ஒப்புக்கொண்ட துணிபு. ஹிந்து மஹா மதத்திற்கும் மற்ற மதங்களுக்கும் உள்ள வித்தியாசங்களை எடுத்துக் காட்டுவது இங்கு அத்யாவசியகமானபடியால் சாஸ்திர யுக்தி அநுபவப் பிரமாணங்களுடன் முறையே மஹா கெம்பீரமான பெரிய மஹான்களால் அங்கீகாரம் செய்து ஸ்தாபிக்கப்பட்டுள்ள **பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாமியம்** என்ற மூன்று மதங்களின் உண்மைகளையும் கொள்கைகளையும் யதார்த்தமாகக் கூற ஆரம்பம்.

## பௌத்தம்.

இந்த மதம் சாதாரணமல்ல. நமது இந்தியாவில் அநேக அரசர்களால் அதிககாலம்வரை கையாண்டு அங்கீகாரஞ்செய்து அநுஷ்டித்துவந்திருப்பது. நெடுங்காலம் இந்தியாவில் நிலை

துள்ளது. இம்மதத்திற்கு ஆசாரியர் பலர் இருப்பினும் முக்ய மானவர் **கௌதமபுத்தர்**. புத்தாவதாரம் ஒன்பதென்று சொல்வ தற்குச் சாஸ்திரப் பிரமாணமுண்டு. இந்தக் கௌதம புத்தர் ஒன்பதாவது புத்தரெனச் சொல்வது சாமான்யம். ஜீவகாருண் யமே இந்த மதத்தின் முக்கிய கொள்கை. விக்கிரக ஆராதனை வருணாச்சிரம தருமம் இவைகள் இம்மதத்தினருக்குக் கிடை யாது. இந்தப் பௌத்த மதத்தைப் போலி இந்து மதமென்று சிலர் சொல்வது வழக்கம். **திருஞானசம்பந்தர், மாணிக்கவாசகர், சங்கரர், இராமானுஜர்** முதலிய அவதார புருஷர்கள் புத்தமதத் தைப் பலமாகக் கண்டித்து இருக்கிறார்கள். நமது யதார்த்தமான கலப்பில்லாத ஹிந்து மதத்தை நோக்கும்போது பௌத்தமதம் நமக்குப் பிரமாணமல்ல.

## கிரிஸ்தவம்.

இந்த மதம் இரண்டாயிரம் வருஷங்களுக்குட்பட்டு பிறந்த **ஏசுநாதர்** என்பவரால் பூலோகத்தில் வெளியிட்டு ஸ்தாபி தஞ்செய்யப்பட்டது. இந்த மதத்தின் ஆசிரியரின் அன்பும் பொறுமையும் சிலாகிக்கத்தக்கது ஜீவகாருண்ய மூர்த்தியென்று ஏசுவைச் சொல்லலாம். இம்மதத்தினர் செய்யும் பாவங்களைக் கடவுள் மன்னித்து விடுவாரென்று நம்பிக்கை கொண்டிருக்கிறார் கள். இந்த மதத்தோர்க்கு யோகம் நிஷ்டை இவைகள் ஏகதேச மாகக்கூட இல்லையென்பதற்கு இடமுண்டு, இம்மதத்தின் பெ ரும்பாலருக்கு விக்கிரக ஆராதனை கிடையாது. சிறிது ஜெபம் மட்டும் உண்டு. வருணாச்சிரம தருமம் பூராவும் இல்லையென்று லும் செல்வத்தினால் ஜாதிபேதம் பாராட்டுகிறார்கள். பௌத்தம் இஸ்லாமியம் இந்த மதத்தைப்போல கிரிஸ்தவ மதம் அவ்வளவு ஆழ்ந்த கருத்துடையதாகச் சொல்ல முடியாமற் போனாலும், ஏசு நாதரது திவ்ய கட்டளையான வேதப்படி தவறாது நடந்தால் மோக்ஷம் கிடைக்குமென்பதில் சந்தேகமே இல்லை. இந்த மதத் தில் கடவுளை நிச்சயம் செய்வதற்குத் தகுந்த தர்க்கயுக்தி மார்க் கங்கள் விரிவாகக் கிடையாது. விசாரியாமல் பைபிலில் கூறி யவை யாவையும் நம்பிவிடுவார்கள். அநேகமாகக் கிருஸ்தவர்கள்

மனதை யடக்கிச் சமாதி பெற முயல்வதில்லை, பைபில் ஒன்றே முக்கிய சாஸ்திரம். அதற்கனுசரணமாக சாஸ்திரங்கள் சில வுள்ளன. கிருஸ்தவர்கள் பூமியாள்வதற்குத் தகுந்த க்ஷத்திரிய தர்மம் ஒரு சாஸ்திரத்திலும் சொல்லவில்லை. பைபிலில்சொல்லு கிறபடி நடப்பது அசாத்தியமானது. பைபில் வேதப்படி நடக்கிற கிருஸ்தவன் ஒருவனுண்டோவென்ற சந்தேகம் பலமாய் அவர்களுக்கே உண்டு, தங்களுக்கு அனுகூலமான மார்க்கங் களைத்தானே சாஸ்திரப் பிரமாணமின்றி ஏற்படுத்திக் கொண் டார்கள். ஆத்ம சக்தி, மனோசக்தி இவைகள் உண்டென்று நம்பி அவர்கள் ஆராய்ச்சி செய்வதில்லை.

## இஸ்லாமியம்.

இந்த மதத்தின் முக்கியஸ்தாபகர் அராபி நாட்டு மக்காவில் அவதாரம் செய்த **முகம்மது நபிநாயகம்** என்பவர், இந்த மார்க் கத்தில், தியானயோகம், ஹடயோகம், இராஜயோகம் இந்த மூன்றுமே முக்கியம். மற்ற யோகங்களில் எல்லாம் தேர்ச்சி பெற்ற மஹான்கள் இந்த மார்க்கத்தில் அநேகரிருந்திருக்கிறார் கள் இந்த மதத்தின் முக்கிய நூல் **கோரான் வேதம்**. இம்மார்க்கத் தில் அநேக நபிமார்கள் இருந்திருக்கிறார்கள். மதவிஷயத்தில் இவர்களைப்போல அழுத்தமுள்ளவர்கள் மற்ற மதஸ்தர்கள் ஒரு வரு மில்லையென்றே சொல்லலாம். பாரத நாட்டில், இந்து இஸ் லாமிய மத ஒற்றுமை நெடுநாட்களுக்கு முன்னேயே வந்திருக் கிறது. இடையில் சிலசில துஷ்டர்களால் கலகம் ஏற்பட்டதைப் பிரமாணமாகக் கருதுதல் பிசகு. முகம்மதிய ஜாதியாரான கபீர் தாஸ் மஹா ராமபக்தனாயிருந்தார். ஐதராபாக்கம் நவாப்பிடம் இராமதாஸ் என்பவர் சென்று இந்துமத இஸ்லாமிய மத ஒற் றுமையைக் காட்டிப் பத்திராசலம் தாலூகாவை ஸ்ரீ ராமர் ஆலயத்திற்கு எழுதி வாங்கினார்.

டில்லி பாக்ஷாவின் குமாரத்தி ஸ்ரீரங்கம் ரெங்கநாதஸ்வாமி ஆலயத்துள், துலுக்க நாச்சியார் என்ற பெயருடனிருப்பது பிரத்தியக்ஷம். இன்னும் இவைபோன்றவை பலவுள. அவைகளை யெல்லாம் இங்கு கூறுதல் சாத்தியமானதல்ல.

## ஹிந்து மதம்

இந்த மதம் உண்டானகாலம் தெரியவில்லை. இதனால் இது அனாதிமதமென்றே ஏற்படுகிறது. இம்மதம் எம்மதங்களையும் வெறுத்துத்தள்ளாது. பொதுவாக இந்துமதம் சமுத்திரம் போன்றது. சமுத்திரமானது சாக்கடை முதல் கங்கைவரை யாதொரு பேதமுமின்றி ஏற்றுக்கொள்ளுகிறது போல ஹிந்து மதமும் எந்த மதங்களையும் பேதம் பாராட்டாமல் ஏற்றுக்கொண்டு வந்திருக்கிறது. இதற்கு முக்கிய பிரமாணமாக இந்தியாவில் நெடுநாட்களுக்கு முன் பக்தனாயிருந்த மஹாபலி அரசனது தகப்பனார் விரோசனன் என்பவன், ஸ்தாபித்த நாஸ்திக மதத்திற்கும் பாணாசூரன் மயில்ராவணன் கோரக்கன் இவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட சாக்தேய மதத்திற்கும் கௌதம புத்தரால் ஆக்கப்பட்ட பௌத்த மதத்திற்கும், முகம்மது நபிநாயகம் என்பவரால் நிலைநிறுத்தப்பட்ட இஸ்லாமிய மதத்திற்கும், இரண்டாயிர வருஷத்திற்குக்குறைந்த வருஷங்களில் பூமியில் தோன்றிய ஏசுநாதர் என்போரால் கண்டுபிடித்துஸ்தாபிக்கப்பட்ட கிருஸ்தவமதத்திற்கும், மற்றும் சமணம் ஜைனம், காபாலிகம் முதலிய மதங்களுக்கும் அந்தந்தக் காலங்களில் நமது மதம் இடங்கொடுத்து வந்திருக்கிறது என்பதைச் சரித்திர மூலமாயறியலாம். அனுபவத்திலும் பிரத்தியக்ஷமாய் விளங்கும். ஒவ்வொரு மதங்களும் ஒவ்வொரு நதிகளாகவும், ஹிந்து மதத்தைச் சமுத்திரமாகவும் ஆன்றோர்கள் அங்கீகாரம் செய்திருக்கிறார்கள். மற்ற மதங்களுக்கு ஆபத்து வரும்போது நமது மதம் இடங்கொடுத்து உதவியிருக்கின்றது. தற்போதும் துவேஷ மின்றிச் சமரசமாகவே வருகின்றது என்பதை அனுபவப்பிரக்ஞர்கள் யாவரும் ஒப்புகின்ற விஷயமே மற்றெந்த மதமாவது நமது ஹிந்து மதத்தைத் தாங்கியது என்பது ஓர் காலத்திலு மில்லை. சமுத்திரம் ஆற்றைத் தாங்குதல்போல ஹிந்து மதம் மற்ற மதங்களைத்தாங்குதல் ஸகஜம். ஆதிகால முதல் இதுவரை நமது மதத்தை அடியோடு வேரறுத்துவிட வேண்டுமென்ற எண்ணத்துடன் பலமாகப் பலபல கிளைமதங்கள் தோன்றின. அதிக்கிரமமான முயற்சிகள் செய்யப்பட்டன. பல பிரபல அரசர்கள் கிளைமதங்களுக்கு

ஆதரவளித்து வெகு முஸ்தீப்பாயிருந்தார்கள். பலாத்காரப் படுத்தியும் ஒன்றும் பலிக்கவில்லை. ஹிந்துமத ஞான சமுத்திரத்தில் எத்தனையோ பல இடைமதக்குமிழிகள் தோன்றி ஒவ்வொரு காலங்களிலும், அடியோடு மறைந்துவிட்டனவென்பதை மறுக்க வல்லார் யார்? தற்போதும் பலமான குமிழிகள் யாதொரு முயற்சியு மில்லாமல் சமுத்திரத்தில் கரைந்துவிடச் சொல்லவேண்டியதில்லை, ஆகிலும் மதவிஷயத்தில் நாம் அதி ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். சுவாயம்பு மனு, இக்ஷுவாகு நளன், பகீரதன், சகரன், பரதன், இடபன், மாந்தாதா முசுகுந்தன், புரூருவன், சிபி, நகுஷன், இளன், ஸ்ரீராமன், ஜனகன், ரோமபாதன், தசரதன், அரிச்சந்திரன், குசன், ரகு, குரு யயாதி பலி, யுதிஷ்டிரன, பீஷ்மன், சந்தனு, பரீக்ஷித்து, ஜெனமேஜெயன், விக்கிரமாதித்தன், சந்திரகுப்தன், போஜன் முதலிய பிரபல ஏகாதிபத்திய அரசர்கள் ஹிந்து மதத்தைத் தழுவினவர்களாகவே இருந்து மதஸ்பானஞ் செய்திருக்கிறுர்கள். அநேக ஸ்ருதி, ஸ்மிருதி; ஆகமம், புராணம், வேதாங்கம், இதிகாசம், சாஸ்திரம், மீமாம்ஸம், முதலிய பிரபல கிரந்தங்கள் இந்த மதத்திற்கு ஆதாரமாயிருக்கின்றன. இந்த மதத்தின் சார்பாக சமஸ்கிருதம், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஹிந்துஸ்தான், மஹாராஷ்டிரம், குஜராத்தி, பங்காளி, ஒரிஸா, சிங்களம், பஞ்சபி முதலிய பாஷைகளும் ஒவ்வொரு பாஷைகளிலும் அளவிறந்த கிரந்தங்களும் தயாராயிருக்கின்றன. இம்மதத்தைப்பற்றி வரையறுத்துக்கூற இயலாதாகையால் இங்ஙனம் சுருக்கிக் கூறப்பட்டது.

### ஹிந்துமதக் கொள்கைகள்,

பஞ்சமூர்த்திகளே பிரதானமான தெய்வங்கள். சாமான்ய மனுஷ்யர்களுக்கு வருணாச்சிரமதருமமும், விக்கிரகஆராதனையும் சாஸ்திர ஆராய்ச்சியுமே ஆதாரம். தியான்யோகம், ஹடயோகம், இராஜயோகம் சிவயோகம் லயயோகம், சிவராஜயோகம், லம்பிகா யோகம், கெஜமார்த்தண் பரமயோகம், நவகண்டயோகம், இராஜ ராஜேஸ்வரியோகம், பரமாகண்டலயோகம், சிவராஜாங்கயோகம், சிதானந்தயோகம், காலாஷ்டகயோகம் இவைகளே அங்கம் சரியை

கிரியை, யோகம், ஞானம் இவைகள் முறையே படிப்படிகள். ஜீவகாருண்ய விஷயங்களில் வைராக்கியம், மந்திர ஜெபதாரணை, இந்திரிய நிக்கிரகம், மனோஜெயம், அஞ்ஞான நிவர்த்தி, பொறுமை, கல்வி, அடக்கம், தீரம், சகுணம், நிர்க்குணம் இவைகள் சர்வசாதாரணம். சாந்தம், சமத்துவம், நீதி, திடம் இவைகளை முக்கியமாய்க் கொண்டது. சவிகற்பம், நிருவிகற்பம், சகசம் இவ்வகையான நிஷ்டைகளை ஏகாந்தமாகவுடையது, சாஸ்த்திரபாராயணம் வேதபாராயணம், ஆத்மானாத்மவிசாரணை, ஞானவாராய்ச்சி, போத்துணிபு, யோகவுறுதி, ஸ்வாதந்திரிய எண்ணம் இவைகளை ஏகதேசமாகவுடையது. இன்னும் இவ்வகைக் கொள்கைபலவுள்ளது.

## ஹிந்துக்களின் அகண்ட நோக்கங்கள்.

உலகத்திலுள்ள எல்லா மதங்களையும் சாமான்யமாக எண்ணமாட்டார்கள், ஒவ்வொரு மதங்களும் மஹான்களால் அங்கீகாரம் செய்துஸ்தாபிக்கப்பட்டதென்பதை மறக்கமாட்டார்கள். ஹிந்து மதமே பிரதானமானது. மற்ற மதங்களை இகழ்ந்து பேசமாட்டோம். அன்னிய மதங்களிற் சேரமாட்டோம். அன்னியமதஸ்தர்களை எங்கள் மதத்திற்கு வாவென்று வற்புறுத்தியாவது சாதாரணமாகவாவது, பணத்தைக்கொடுத்தாவது மலஜலபாண்டமான ஸ்திரீகளைக் காட்டியாவது, அன்னமிட்டாவது, அழைக்க மாட்டோம். மோசக்கருத்தான எண்ணம், பேச்சு, நடை, செய்கை இவைகள் எங்கள் மதத்தில் திரிகாலத்திலும் கிடையாது. அன்னிய மதங்களை எதார்த்தத்தில் நம்பிப்போய்ச் சேரமாட்டார்கள் ஒவ்வொரு மதங்களிலும் ஒவ்வொரு நன்மை இருப்பதாக எண்ணுவார்கள், பணத்தை நம்பி மதஸ்தாபனஞ் செய்யவாவது துறவிகளாய்ப் புறப்பட்டாவது நினைக்கமாட்டார்கள். சமரசமான நினைப்பு வார்த்தை செய்கை பாவனை இவைகளே அவர்களுடைய கொள்கை. இவ்விதமாக ஓர் இயற்கை அறிவுள்ள இந்தியன் கூறிவிடுவான்.

## ஆபத்து.

இத்தகைய அபாரமான விசாலமாகிய எதேச்சையான காம்பீர்யம் பொருந்திய கண்ணியமான பெருமையான நமது தெய்

வீகத் தன்மை பொருந்திய ஹிந்துமதத்தையும், சொற்பபேதமே கொண்டமைந்துள்ள பௌத்தமதத்தையும், வெகுதீரமான இஸ்லாமிய மதத்தையும், தரிசனத்திற்குப் பிரியமுள்ள சமணமதத்தையும், ஹிந்து மதத்தின் ஓர் பாகமாகிய ஸௌராஷ்டிரர் மதத்தையும், யூத மதத்தையும், இந்த மதஸ்தர்களெல்லோரையும் அடியோடு இந்தியாவிலில்லாமற் செய்து முழுமையும் கிருஸ்தவமாக்கிவிட வேண்டுமென்று வெகு கண்டிப்பாய்க் கூட்டங்கூடி அமெரிக்கநாட்டு புரொடஸ்டாண்டு பாதிரிமார்கள் ஆலோசித்து அதற்கு வேண்டிய பிர[illegible]ற்பாடுகள், உதவிகள், அமெரிக்காவில் செய்யப்பட்டு வருகின்றன. உலகத்திலு[illegible]மதஸ்தர்களையும் அடியோடு கிறிஸ்தவர்களாக்கிவிட ஐந்து வருஷ[illegible]மாய் நிச்சயப்படுத்தி யிருக்கிறார்களாம். இதற்காக நாற்றுத்தொண்ணூற்றைந்து லக்ஷம் கிறிஸ்தவர்கள் முப்பது பாகமாகப் பிரிந்து கிறிஸ்தவ மதப் பிரசாரஞ்செய்ய ஒன்றுசேர்ந்து உழைக்கப் போகிறார்களாம். அதற்காக இருபது கோடியே அறுபது லக்ஷம் ரூபாய் செலவிற்கென்று மதிப்பிட்டிருக்கிறதாம். கூடிய சீக்கிரம் நமது இந்தியாவிற்கு வந்து விடப் போகிறார்களாம் இந்த விஷயமாக ஆறுமாதகாலமாய் எல்லா இங்கிலீஷ், தமிழ் பத்திரிகைகளிலும் பிரசுரித்திருப்பது யாவருக்கும் தெரியாதென்று சொல்ல இடமில்லை இந்த விஷயமாய் எனது முக்கிய சிஷ்யரொருவர் பம்பாயிலிருந்து ஓர் கடிதம் எழுதியிருக்கிறார் அவையாவன்:—

பம்பாய், 7—7—20.

அபேதவடிவான, எனது சற்குருநாதராகிய ஸ்ரீ அருட்கவி சுத்தாத்வைதி விலக்ஷணானந்த ஸ்வாமிகள் திருச்சந்நிதானங்களுக்கு, நமது ஹிந்துமதத்தை அடியோடு கிறிஸ்தவமதமாக்கி விட வேண்டிய பிரபல முயற்சிகள் அமெரிக்காவில் பாதிரிமார்களால் நடைபெற்று வருகின்றது. ஆயின் நமது மதத்தை ஒருவரும் அசைக்காதபடி முன்னோர்கள் பலமான அஸ்திவாரம் போட்டு விட்டார்கள். ஆனாலும் நாம்முன் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும் என்று ஓர் மஹாராஷ்டிர ஹிந்துப் பத்திரிகை கூறியிருக்கிறது. இந்த விஷயம் உங்களுக்கும் தெரிந்திருக்கலாம். அந்த விஷயத்

தைப்பற்றி நீங்கள் என்ன யோசித்திருக்கிறீர்கள் என்பதை அடியேன் அறிய விருப்பம். இந்த மாகாணங்களில் அது விஷயமாய் வெகு ஜாக்கிரதையா யிருக்கிறார்கள். மற்றவிவரங்கள் சந்நிதான லட்டர் பார்த்து எழுதுகிறேன்.

இங்ஙனம்,

**தமால் சிங்.**

இது இப்படியிருக்க, இந்தியாவிற்கு வரப்போகிற அமெரிக்க நாட்டு புரோடஸ்டாண்டு கிறிஸ்தவ மதத்தைப்பற்றிச் சற்று ஆராய்வோம்.

## புரோடஸ்டாண்டு மதம்

ஏசுநாதர் காலத்திற்குப்பின் மேற்கு நாடுகளில் மதவிஷயமான பற்பல சச்சரவுகளுண்டாகி **லூத்தர்** என்பவரால் கிளர்ச்சி செய்யப்பட்டுக் கக்ஷிசேர்த்து வேறுபிரித்துவைத்தது இந்தமதம் இது ரோமன் காத்தலிக் மதத்திற்குப்பின் பிரிந்து உண்டானது. ஏறக்குறைய இந்த மதத்தை நாஸ்திகமதமென்றே சொல்லலாம் காத்தலிக் மதத்தார் கொள்கையில் சில பாகம் ஹிந்து மதத்தை ஒப்பியே இருக்கிறது. அநேக நூற்றாண்டுகளுக்கு முன் மேற்கு நாடுகளில் மதவிஷயமான கிறிஸ்தவர்கள் சண்டையே பலமா ஏற்பட்டுக் கொலை முதலிய கொடூரமான செய்கைகள் நடந்திருக்கின்றன. ஒரு கிறிஸ்தவரை நம்பிய பல பிரிவுகொண்ட கிறிஸ்தவர்கள் இப்படி என் அடித்துக் கொள்ளவேண்டும். ஒரு உண்மையான மதத்திலேயே அவர்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டதாகத் தெரிகிறது. உங்கள் ஹிந்துமதத்தில் மதச்சண்டை உண்டாகிறதேயென்று இத்தகைய மதப் பிடிவாதமுள்ள சண்டைக்காரர்கள் சொல்லுகிறார்கள். நான் இப்போது கிறிஸ்தவ மதத்தைக் குறை கூறவாவது, தூஷிக்கவாவது கண்டிக்கவாவது வரவில்லை, மற்றோ ஹிந்துக்கள், புத்தர்கள், இஸ்லாமியர், சமணர், ஸௌராஷ்டிரர், யூதர் என்ற இந்த மதஸ்தர்களை யெல்லாம் எங்கள் மதத்திற்கு வாருங்கள் என்றழைக்கிற அமெரிக்க நாட்டுப்புரொடஸ்டாண்டு கிறிஸ்தவ மதப் பாதிரிமார்களை மட்டுங் கண்டிக்கத் தயாராயிருப்பேன்.

## பக்குவம்.

ஏசு கிறிஸ்தவர் கடவுளால் அனுப்பப்பட்டு வந்தவர் என்பதை நான் உண்மையில் மறுக்கவில்லை. பைபிலில் கூறியவையாவும் மறுக்க இயலாதென்பதை நான் மறுக்கவில்லை. ஏசுநாதர் பைபிலில் சொல்லியபடி முறையே நடப்பவர்களுக்குப் பலன் கிடைப்பதைப் பற்றி எனக்குச் சந்தேகமே இல்லை. இது இப்படி நிற்க,

அமெரிக்கநாட்டுப்பாதிரிமார்கள் நமது இந்தியாவிற்குவந்து போதித்து நமதுமதஸ்தர்களை யெல்லாம்கிறிஸ்தவமதமாக்கிவிடப் போகின்றார்கள் என்பது முன்னே கூறிய விஷயம். அவர்கள் நமக்கு எதற்காகப் போதிக்க வருகிறார்கள் என்பதை விவரிக்க ஆரம்பித்தோமானால் அந்தப் பாதிரிமார்களது அற்ப அறிவின்மைக் குணம் பிரத்தியக்ஷமாய் விளங்கிவிடும். உலகத்திலுள்ள எல்லா மதஸ்தர்களும் விஷயந் தெரியாத அஞ்ஞானிகள், நாங்கள் மாத்திரம் ஞானிகளென்றெண்ணியிருக்கிற அற்பமான விரிந்த மூளையில்லாத மதப் பிடிவாதமுடைய அமெரிக்க நாட்டுப் புரொடஸ்டாண்டு கிறிஸ்தவர்கள் இந்தியாவில் வந்து மதப்பிரசாரஞ் செய்து நமது ஜனங்களுக்குப் போதிக்க வருவார்களானால் அவர்களைச் சில கேள்விகள் அவர்களது மதக் கொள்கைகளைப் பற்றியும் பைபிலில் கூறியபடி நடக்கவேண்டிய சட்டப்படியும் சில கேள்விகள் கேட்கவேண்டும்.

அவையாவன:

1. நீங்கள் உண்மையான கிறிஸ்தவப் பாதிரிகளாயிருப்பீர்களானால் உங்கள் ஏசுநாதர் சொல்லியபடி வலது கன்னத்திலடித்தால் இடது கன்னத்தைத் திருப்பிக் காட்டுவீர்களா?

2. உண்மையான கிறிஸ்தவ போதகர்கள் ஒருமதத்தையும் தாழ்வாக நினையாதிருக்க வேண்டுமென்று ஏசுநாதர்கூறிய முறைப்படி நீங்கள் நடந்து கொள்ளுகிறீர்களா?

3. எல்லா மனிதர்களையும் சமமாகப் பாவிக்கிறீர்களா?

4. ஜீவஹிம்சை கூடாதென்ற பைபில்படி நடக்கிறீர்களா?

5. மண், பெண், பொன் என்ற மூன்றாசைகளையும் அடியோடு விலக்கி இருப்பதே போதகர்களுக்கு அழகென்று வேதங் கூறுகிறபடி இருக்கிறீர்களா?

6. கடவுளுக்கும் உங்களுக்கும் ஏதாவது பிரத்தியக்ஷ சம்பந்தமுண்டா? அல்லது புஸ்தகக் கடவுள் சம்பந்தந்தானா?

7. நீங்கள் உங்கள் மதப்படி பூராவும் முடிந்த பூரணஞானியானபின் அஞ்ஞானிகளுக்குப் போதிக்க வரவேண்டியபடி வந்திருக்கிறீர்களா?

8. கடவுள் ஆவியாயிருக்கிறாரென்று சொல்லுகிறீர்களே ஆவிக்கடவுள் தண்ணீராகவும் மாறிப்பிறகு கடவுளாகவும் மாறிவிடுவாரா?

9. இன்னபடியென்று கண்டுபிடித்தறிய முடியாத கடவுளைக் கண்டபின்பு தான் எங்கள்மீது ஜீவகாருண்யம் பிறந்து போதிக்க வந்தீர்களோ?

10. எல்லா அபிமானங்களையும் விட்டவர்களல்லவா ஞானிகள், அப்படி இருக்க உங்களுக்கு எல்லா அபிமானமும் போய்விட்டதா?

இவ்வண்ணமாக இன்னும் பல கேள்விகள் கேட்போமானால் பாதிரிமார்கள் நமதுமுன்னிற்கஅஞ்சுவார்கள். பாதிரித்துரைமார்களே! உங்களது மதத்தின் பெரிய ஆசாரியராகிய ஏசுநாதர் தன்மையில் கோடி கோடி பங்கில் ஒரு பங்குகூட இல்லாத நீங்கள் எந்த இயற்கை ஞானத்தைக் கொண்டு போதிக்க வந்தீர்கள் என்று கேட்பதற்குப்பதில் கவர்னர் பேட்டிதான். தான் ஞானியாய் முடிந்த பின்பு கடவுள் உத்தரவினால் உலகத்திற்குப் போதிக்க வரவேண்டுமே தவிர இப்படித் தான் தோன்றி ஞானிகளாய்ப் போதிக்க வருவது உங்கள் கிறிஸ்தவ மதத்திற்கே இழிவுண்டாக்கிவிடும் போலிருக்கிறபடியால் இனி உங்கள் சொந்த வேலைகளைப் பார்த்துக்கொண்டு திரும்பி விடுவீர்கள், ஏசுநாதருக்கும் அவரது மதத்திற்கும், பைபில் வேதத்திற்கும், அடியோடு மதிப்பைத் தொலைக்க வந்த அபராத புருஷர்களே! இனியாவது இத்தகைய செயல்களைவிட்டு உண்மையான கிறிஸ்தவர்களாக இருப்பதற்கிச்சை கொள்ளுங்கள். உண்மையான ஹிந்துமதஸ்தன் தான் எதார்த்தமான கிறிஸ்தவனென்று **ஸ்வாமி விவேகானந்தர்**

உங்கள் நாட்டில் வந்து சொன்னதை மறந்துவிட்டீர்களா? ஒரு மதத்திலிருக்கிறவர்களை மற்றொருமதத்திற்கு ஏன் அழைக்க வேண்டும்? ஹிந்துமத சாஸ்திரங்களிற் சொல்லாத இரகஸ்யங்கள் உங்கள் மதத்தில் என்ன சொல்லுகிறது? அதைக்கொஞ்சம் எடுத்துக் காட்டுங்களென்றால் பாதிரியார்கள் படும்பாடு பரமண்டலந்தான். நான்ஏசுகிருஸ்தவரைப்பெரிய மஹானாகவே நினைக்கிறேன் அவரது மதம் நல்ல மதமென்றே கருதுகிறேன். பைபிலை மேலானசாஸ்திரமாகவே நம்பி இருக்கிறேன். தற்போதுள்ள பாதிரிமார்களும், மற்ற கிருஸ்தவர்களும் அதன்படி நடக்காதபடியால் இவர்களைப்பற்றி என் மனம் ஜீவகாருண்ய உஜ்ஜிவனார்த்தமாகவே வருத்தமடைகிறது. இந்தப் பாதிரிமார்களும், மற்றைய மதங்களிலிருந்து கிருஸ்தவ மதத்தைத் தழுவினவர்களும், ஹிந்துக்களைக்காட்டிலும் என்ன சக்தி அதிகமாக அடைந்துவிட்டார்கள்? மஹான் விவேகானந்த ஸ்வாமிகள் அமெரிக்கா நாடு சென்று உங்கள் கிருஸ்தவமதம் பிரயோஜனமில்லை. அதை விட்டொழித்து எங்கள் இந்துமதத்திற்கு வாருங்கள்என்றழைக்கவே இல்லை. பொதுவாக ஒவ்வொரு மதங்களின் தன்மைகளையும் உண்மைகளையும் விவரமாக எடுத்துக்கூறியதில் மயங்கி நீண்ட காலமாக அடகு வைத்திருந்த மனதைத்திருப்பி ஹிந்து மதத்திற் சேர்த்துவிட்டார்கள் அதுபோல நீங்களும் உலக மதங்களையெல்லாஞ் சமமாக எண்ணிப்போதிக்காமல் கிணற்றுத்தவளையைப்போலக் குருட்டு நம்பிக்கை கொண்டு கிருஸ்தவமதக் கிணற்றுக்குள்ளேயே ஆடி ஓடி மற்றைய மத நாட்டு வளப்பம் தெரியாமல் தனது கிணற்றைப்பற்றிப் போதிக்க வருகிற கிருஸ்தவ மதப் புரோடஸ்டாண்டுததவளைகள் ஹிந்துமத சமுத்திரத்திற்குக் கெடுதிசெய்ய எண்ணி வருவதை நினைக்க நினைக்க நகைப்பிற்கிடமாயிருக்கின்றது.

---

## சூழ்ச்சிகள்.

அமெரிக்கா நாட்டுப் புரொடஸ்டாண்டு கிருஸ்தவமதப் பாதிரிமார்கள் தங்களது மதத்தைப் பரவச்செய்வதின் மூலநோக்கம் இன்னதென்பது எனக்கு இப்போது தெரிந்திருந்தாலும்

இந்தப்புஸ்தகத்தில் எழுத்து மூலமாய் எழுதக்காலமும் பிரிய மும் அபிப்பிராயமும் இப்போது எனக்கில்லை. ஏனெனில் அதன்முக்கியமான உண்மைக்கருத்தை வெளியிடவேண்டியகால மிதல்லநமது ஹிந்துமதசாஸ்திரங்களின் தாற்பரியப்படிஒருவரை யும் குறை கூறலாகாது என்ற ஞாயமிருப்பதால் போதிக்க வரு கிறபாதிரிமார்களது நடத்தைகளைக்கூற முடியவில்லை. ஆனாலும் உண்மையான சில விஷயங்களைமட்டும் சொல்லி விடுதல் தகுதி யென்று நினைக்கிறேன். ஏசுநாதர் கூறிய உபதேசமாகிய ஜீவ ஹிம்சைகூடாதென்ற பெரிய வார்த்தையை அடியோடு மறந்து ஹிந்துமத விரோதமான பசுக்கொலை முதலான பல கெட்டகாரி யங்களைச் செய்து, அவற்றின் தசைகளைத் தன் சரீரம் பருக்க விலாப்புடைக்கத் தின்றுவிடுகிறார்கள். லாகிரி பதார்த்தங்களைக் கண்டபடி உபயோகித்துப் புரளுகிறார்கள். புத்த மதத்திற்கு விரோதமான பல ஜீவஹிம்சைகளைக் செய்கிறார்கள். கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட ஜீவப் பிராணிகளை ஹிம்சிக்கலாமா வென்றால் அதற்குப் பதில் கொடுப்பதே இல்லை. இந்தியாவில் வந்து மதத் தைப் போதிப்பதற்கு ஒன்றுந் தெரியாத நாகரீகமற்றதாழ்ந்த ஜாதிக் கூட்டத்தாருக்கே போதிக்கிறார்கள். விஷயந்தெரிந்தவர் களைக்கண்டால் பேசாது போய் விடுகிறார்கள். இவ்விதமான பா திரிமார்களின் செயல்களைநோக்கும்போது விசனகரமாகவே இரு க்கிறது இன்னோர்களின் பள்ளிக்கூடங்களுக்கு ஹிந்துமதப் பிள்ளைகளையும் பெண்களையும் அனுப்புவதே குற்றமென்று எல் லா விதத்திலும் ஏற்பட்டிருக்க அவற்றைச் சூழ்ச்சியென்று கருதவேண்டும். இந்தப் புஸ்தகத்தை முழுதும் படித்தவுடன் எவனுக்கும் ஆத்திரம் உண்டாகாமலிராது. செய்தபாவங்களை யெல்லாம் ஆதிவார தினங்களில் கடவுளுக்கு நேரே அனுப்பி விடுகிறார்கள். வஞ்சகமாகப் பள்ளிக்கூடங்களேற்படுத்தி ஹிந்து மதப் பிள்ளைகள் பெண்களுக்குச்சிறிது சிறிதாக பைபில் கற்றுக் கொடுத்துத் தமது மார்க்கத்தில் திருப்பி விடுகிறார்கள். பலாத் காரமாக ஒரு மதத்திலிருப்பவனை மற்றொரு மதத்திற்கு அழைப் பதில் யாதொரு பிரயோஜனமுமில்லை. ஏசுநாதர்தனது முக்கிய கொள்கைகளைத் தான் அனுஷ்டானத்தில் காட்டிவிட்டபடியால்

அவரழைக்காமலே அவரது கொள்கையில் பலர் சேர்ந்து விட்ட னர். வற்புறுத்தி மதத்திற்கு ஆள்சேர்ப்பது எதற்கென்று நான் கட்டாயம் வற்புறுத்துவேன். ஒரு உண்மையான ஹிந்துமதஸ் தன் மற்ற மதஸ்தர்களைத் தன்மதத்திற்கு அழைக்கவேமாட்டான் ஏசுநாதரது அபாரசக்தியும் ஆழ்ந்த கருத்தும் கெம்பீர நோக்க மும், சமரச புத்தியும், ஜீவகாருண்ய குணமும் பொறுமையும் அடிக்கடி என்மனதில் தோன்றும்போது மயிர்க்கூச்செடுக்கின்றது இத்தகைய அகண்டமான மனதுடைய ஏசுநாதர் பெயரைவைத் துக்கொண்டு இந்தப் பாதிரிமார்கள் செய்கிற வேலைகள் என் மனத்தை வருத்தமடையச் செய்கின்றன. பெண்சாதியை விட் டுப்புருஷனையும் புருஷனை விட்டுப்பெண்சாதியையும், இருவரை யும் விட்டுப் புத்திரனையும், மோசமாக மதத்திற் சேர்க்கும்படி எந்த பைபிலில் கூறியிருக்கிறதோ தெரியவில்லை. ஆதிநாட்களில் இராக்ஷதர்கள் பலாத்காரமாக நேர் வந்து வஞ்சகமின்றி பஹிரங் கமாக வேண்டிய ஸ்திரீகளைக் கற்பழித்து விட்டார்கள். இக்கா லத்தில் அதி ரகஸ்யமாய் மதவேஷம் போட்டுக்கொண்டு தகாத காரியங்களையெல்லாம் செய்து விடுகிறார்கள். லௌகிக விஷயத் தில் பலபல விதமான சூழ்ச்சிகள் செய்து ஹிந்தியர்களில் மத விஷயந்தெரியாதவர்களைத் தமது மதத்திற் சேர்த்துவிட்டார்கள். கெம்பீரம், தீரம், பாண்டித்தியம், தைரியம் இவைகள்பொருந்திய ஹிந்துக்களிடம் பாதிரிகள் போகாமல் தாழ்ந்த ஜாதியென்று தொழில் விசேஷத்தால் கருதப்படுகிற ஏழைப்பஞ்சமர்களிருக்கு மிடங்களிற் சென்று போதிக்க ஆரம்பிக்கின்றனர். மற்றவர் களிடத்தில் அவர்களது பாச்சா பலிப்பதில்லை. ஓர் சாதாரண மான ஹிந்தியன் கேட்கிற கேள்விகளுக்கு உயர்ந்த பாதிரிமார் பதில் சொல்ல விழிக்கிறார்கள். ஹிந்துமதத்திற் பிறந்தமஹான் கள் எல்லா மதங்களையும் ஒன்றுக்வே கருதுகிறார்கள். தனது சொந்த மதத்தை நழுவவிடமாட்டார்கள். ஹிந்துமதத்திலும் குறுகிய புத்தியுள்ள மதாசாரியர்கள் இல்லையென்று நான் சொல்லவில்லை. சமரசமான மனதுடைய ஞானிகள் இந்தியாவில் அநேகரிருந்தாலும் தற்போது யாவருக்குந் தெரியாதிருக்கிற ஓர் மஹானது சர்வமத சமரசத் தன்மையைமட்டும் இங்கு

க்காட்ட வேண்டுவது இந்தச் சந்தர்ப்பத்தில் அத்யாவசியக மென்றே நினைக்கிறேன்.

## ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸதேவர்.

இந்த மஹான், முகம்மதியன் அவனது மதத்தையும் புத்தன் சமணன் கிருஸ்தவன் ஹிந்து முதலிய எல்லோரும் தன் தன் மதத்தை விடாமல் முறையே அனுஷ்டித்து வரவேண்டு மென்று தமது சிஷ்யர்களுக்குப் போதித்திருக்கிறார். அவர் ஏசுநாதர் ஆலயத்திற்குச் சென்று அவரை நினைத்து ஆடிப்பாடி யிருக்கிறார். பள்ளிவாசலிற்சென்று இஸ்லாமியமத முறைப்படி தொழுதிருக்கிறார். புத்தரையே தெய்வமென அடிக்கடி கொண்டாடி இருக்கிறார். இப்படிச் சமரசமான ஞானிகள் அடிக்கடி நாட்டில் அவதாரம் ஆவார்களானால் இப்படிப்பட்ட பாதிரிமார்களது குருட்டு மத நம்பிக்கை போய் விசாலமான அகண்ட மதவுணர்ச்சி உண்டாகும்.

## பயந்தவர்கள்.

அமெரிக்கா தேசத்துப் பாதிரிமார்கள் 195 லக்ஷம் பேர்கள் அளவில்லாத கோடிகணக்கான டாலர் திரவியத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு கிருஸ்தவ மதஸ்தாபனஞ்செய்ய வரப்போகிறார்களென்பதைப் பார்க்க அவர்களது தைரியமில்லாத பயங்காளித்தன்மையையும் கடவுளிடத்தில் பூரண நம்பிக்கையில்லாத குணத்தையும் வெட்ட வெளியாகக் காட்டிவிட்டது. ஆதியில் ஹிந்துமதஸ்தாபனஞ் செய்வதற்கு அவதரித்த மஹா புருஷர்களாகிய திருஞானசம்பந்தர், சங்கரர், மாணிக்கவாசகர், மத்வர், இராமானுஜர், வித்தியாரண்யர், வேதாந்ததேசிகர், ஸ்ரீகிருஷ்ணசைதன்னியர் முதலியவர்களும் புத்தர், முஹம்மது நபீ நாயகம், ஏசுநாதர், அரஹதர் முதலியவர்களும் மதஸ்தாபனம் செய்வதற்கு எத்தனை கோடிடாலர் பவுன் பண்டு வைத்துக்கொண்டு புறப்பட்டார்கள் ஒன்றுமே இல்லை. அவர்கள் கடவுளையே பூரணமாக நம்பிக்கடவுளின் பிரதிநிதிகளாகக் கடவுளையே பண்டாக வைத்துக் கொண்டு புறப்பட்டார்கள். இதை விட்டுப்பணத்தை நம்பிச் சரீரமே நாமென்றஸ்தூல புத்தியினால் மத ஸ்தாபனஞ்செய்யப் புகுந்

ததைப் பார்க்கத் தைரியமில்லாத தன்மையைக்காட்டி விட்டது. கடவுளைப்பற்றிப் போதிக்க வருகிறவர்கள் கடவுளை நம்பாமல் பணத்தை ஏராளமாகக்கட்டி அதில் தாத்பரியம் வைத்து மதஸ்தாபனஞ் செய்யவருவது புத்தியில்லாத கெட்ட மார்க்கமாகவே நான் கருதுவேன். உண்மையான கிருஸ்தவ மதத்தை ஸ்தாபிக்க 195 லக்ஷம் பேர்கள் எதற்கென்பது சந்தேகத்திற்கு இடந்தருகின்றது. பணத்தினாலோ பெண்ணாலோ அதிகாரத்தினாலோ மதத்திற்கு ஆள் சேர்ப்பதனால் யாதொரு பிரயோஜனமும் இல்லை அன்பினால் மதத்திற்கு ஆள் சேரும்படி செய்துகொண்டவர் ஏசுநாதர் என்பதை நான் மறுக்கமுடியவில்லை. ஒரு இயற்கை அறிவுள்ள உண்மையான இந்தியனுக்குப் பதில்சொல்ல 195 லக்ஷப் பாதிரிமார்களுக்கும் முடியாது. புஸ்தகப்படிப்பு யுக்தி பணம் இவைகளைக்கொண்டு மதஸ்தாபனம் செய்ய முடியுமா என்பதை ஆலோசிக்காமல் இந்தியாவிற்கு வரப்போகிற பாதிரிமார்களுக்கு நாம் என்ன மாற்றங் கூறப்போகிறோமென்பது பொருந்தாதென்பதை நான் மறுக்கவேஇல்லை. இதைத்தவிர இரக்ஷண்ய சேனைகளுக்குத் தலைவரான மேஜர்பூத் என்பவர் அமெரிக்காவுக்குச் சென்று 1000 பாதிரிமார்களைக் கொண்டுவரப் போயிருப்பதாக அமிர்தபஜார் கிரானிகிள் முதலிய பத்திரிகைகள் கூறுகின்றன.

---

## எனது சத்திய எண்ணங்கள்.

ஏசுநாதர் கடவுள் தூதன். அவருடையமதம் என்னுடைய மதமே. அவர் வேதம் என்னுடைய ஞானவேதமே. அவர் போதனைமொழிகள் அமிர்தமொழிகளே. அவர்வழிகளில் தவறாது நடப்பவர்கள் பரலோகத்தின் தன்மையைப்பெறுவது சத்தியமே ஏசுவின் அன்பு யாராலும் அளவிடற்கரியதே. ஆனால் எங்களுடைய இந்துமதத்தில் இல்லாத கொள்கைகள் ஒன்றும் கிறிஸ்தவ மதத்தில் இல்லையென்பது திண்ணம். கிறிஸ்தவமதத்திலில்லாதது எங்கள்மதத்தில் உண்டென்பதை பிரத்தியக்ஷமாக நான்காட்டுவேன் எங்கள் இந்தியாவில் பரம்பரையாயுள்ள இந்துக்களை இதுவரை அறிவின்மைக் குணத்தால் கிருஸ்தவ மதத்திற் சேர்ந்தவர்களைப் பற்றிச்சிறிதுவிசனிக்கிறேன். இனி இந்தியாவிற்குவந்து கிறிஸ்

தவமதத்திற்கு ஹிந்துக்களைச் சேர்ப்பதைக் கண்டிப்பது எனது துணிபு கிறிஸ்தவ மதத்தைத் தூஷிக்கிற ஹிந்துக்களையும் நான் கண்டிப்பேன். ஒரு மதத்திலிருந்து மற்றொரு மதத்திற்கு ஆள் சேர்க்கிறவனும், சேர்ந்தவனும், சேருகிறவனும் நல்லமனிதனல்ல வென்பது எனது எண்ணம். இயற்கை மதத்தைவிட்டு மாறுவது பிசகு. ஹிந்துமதத்தை விட்டுவிட்ட இந்திய கிறிஸ்தவர்கள் என்ன கண்டுவிட்டார்கள். ஒன்று மட்டும் கண்டுவிட்டார்கள் அங்குபோய் விழிப்பதே. மதத்திற்கு முயற்சிசெய்து ஆள் சேர்ப்பவனை சிலோனுக்கு ஆள் சேர்ப்பது போல லேபர் கமிஷனர் ஏஜண்டாக நான் நினைப்பேன். எவனெவன் எங்கெந்த மதத்திலிருந்தாலும் அந்தந்த மதப்படி அனுஷ்டித்தால் முக்தி உண்டென்பது முறை. எந்த மதஸ்தனானாலும் ஒழுங்கு தவறினால் கண்டிக்கத் தயார். பாதிரிமார்களில் புத்திசாலிகளில்லையென்று நான் சொல்லவரவில்லை. அத்தகைய புத்திசாலிகளாகிய பாதிரிமார்கள் இத்தகைய அசம்பாவிதமான காரியங்களிற்பிரவேசித்து ஹிந்துக்களைத்தங்கள் மதத்திற்கு அழைக்கும் நினைப்பே வைத்துக்கொள்ளமாட்டார்கள்,

ஏசுதேவரது கட்டளையான வேதத்திற்கு மீறாத மேதாவிகளாகிய பாதிரிமார்களை நான் உண்மையான ஹிந்துமத ஞானியென்றே சொல்வேன். அகண்டாகாரமே சொரூபமான பகவான் மாயை என்கிற பிரபஞ்ச சமுத்திரத்தில் பாரதநாட்டு நடுமத்தியில் எழுந்தபோது ஸ்ரீ ராமனாகவும், கிருஷ்ணனாகவும், வடநாட்டில் எழுந்தபோது புத்தராகவும், தென்னாட்டில் திருஞானசம்பந்தர், நம்மாள்வார் முதலியவர்களாயும், சங்கரர், மத்துவர், இராமானுஜர் இவர்களாகவும், வடமேற்கு உலகத்திலெழுந்தபோது முஹம்மது நபிநாயகமாகவும், அதன் நெடுமேற்கில் எழுந்தபோது ஏசுகிறிஸ்தவராகவும் எழுந்தனரென்பதே எனது துணிபு. கடவுள் சம்மதமே இப்படியிருக்க நாமேன் மதபேதம் பண்ணிக்கொண்டிருக்க வேண்டும். சமரசமும் சகோதர சுபாவமும் சாந்தமுமே வாழ்வென்பது சர்வமதாசாரியரது கொள்கை என்பதை மறக்கமாட்டேன் மற்றொரு சார்பின் மனதாகிய மதாபிமான எண்ணம் உதிக்க ஆரம்பம்.

## நாம் இனிச்செய்ய வேண்டிய வேலைகள்.

நமக்கு மதமே பிராணுதாரமானது. உலகம் பூராவும் மாண்டாலும் மதத்தை நான் விடுவதில்லை. மதத்தைவிட்ட உலகத்தார் தெய்வத்தையும் விட்டவராவார். தெய்வத்தின் சக்திபெற்றது மதம். மற்றெல்லா விஷயங்களிலும் நாம் தாழ்மையுற்றபோதிலும் ஞான சம்பந்தமான மத வாராய்ச்சி விஷயத்தில் மட்டும் எப்போதும் இப்போதும் முப்போதும் தாழ்ந்தவர்களல்ல. மதத்தில் மனவுறுதி பெற்றுச்சார்ந்த நிலைகண்டு தெளிந்த நமது ஹிந்துமத ஞானிகள் நிருவாணிகளாகிய், யாதொரு பற்றுமின்றி இமயமலையின் மீது ஏறி, அகாதமான பனிக்கட்டிகளில் சஞ்சாரஞ் செய்கிறார்கள். ஒரு பாதிரியாரை அப்படி அழைத்துச் சென்றால் அவ்வாறே உயிர் துறக்க நேரிடும். அமெரிக்காவில் விவேகானந்தர் காலை 4-மணிக்குப் பச்சையான குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்வதைப் பார்த்த சில அமெரிக்கர்கள் போட்டி போட்டுக்கொண்டு ஸ்நானம் செய்ததற்குப் பலனாக உயிர்துறந்தனர். எந்த விஷயத்திலும் ஒருவன் செய்கிறானே யென்ற போட்டியால் செய்தால் அது நிலைபெறுவது கடினம். அமெரிக்காவில் அஞ்ஞானமே அடியோடு போய் எங்கும் ஞானச்சுடர் விட்டு எல்லோரும் ஞானிகளாகி அஞ்ஞானியே இல்லாமற்போன பின், ஞானந்தங்க அமெரிக்காவில் இடமின்றி 195 லக்ஷம் பாதிரிமார்கள் தூக்கிக்கொண்டுவந்து நமது இந்தியர்களுக்கும் மற்ற மதஸ்தர்களுக்கும் கொடுக்கவா வருகிறார்கள் என்பதைக் கவனிக்கப் பரிகசிக்க இடமாயிருக்கிறது. கடவுள் ஜீவன், மாயை என்னும் தத்துவங்களைப் பரிகசித்த மற்றோரார் தற்போது ஏற்றுக்கொண்டு மதவிசாரணை பலப்பட்டு வருகிறதென்பதைப் பாரத நாட்டாரே என்பதை மேற்கு நாட்டார் தங்கள் தங்கள் டைரிகளில்பதிவுசெய்து கொண்டிருக்கிறார்கள். மஹான் விவேகானந்த ஸ்வாமிகள் அமெரிக்கா நாட்டிற்சென்று ஹிந்துமதத்தின் அகண்ட அபார நோக்கங்களைச் சர்வமத சமரசமாகப் பிரசங்கவாயிலாகக் கூறியபின்னர் அமெரிக்கநாட்டு பத்திரிகை யொன்று கூறுகிறது. இந்தியாவிலுள்ள ஓர் சன்னியாசியானவர் வந்து நமது நாட்டை ஓர் கலக்குக்கலக்கி நம்மை மயங்கச் செய்து விட்

டார். இதுபோல் எத்தனை சன்னியாசிகள் இந்தியாவில் இருக்கிறார்களோ தெரியவில்லை அவர்களுடைய ஆசாரியர்கள் சக்தி எங்ஙனம் இருக்குமோ தோன்றவில்லை. இம்மாதிரி மத விஷயங்களிற் தேர்ச்சிபெற்ற இந்தியா நாட்டிற்கு நம் நாட்டுப் பாதிரிமார்களைக் கிருஸ்தவ மதப்பிரசாரஞ்செய்ய அனுப்புவது மூடத்தனம். அது கூடாது. இனி அதை ஒழிக்கமுயல்வதே நமக்கு அழகென்று வற்புறுத்திக் கூறியிருக்கின்றது. இனி நாம் மயங்காது ஜாக்கிரதையாயிருக்கிற காரியங்களைமட்டும் துரிதமாய்க் கவனிப்போம். நமது ஹிந்து மதத்தினரை முழுமையும் கிறிஸ்தவமதம் ஆக்கிவிட வேண்டிய முயற்சியுடன் வருகிற அமெரிக்க நாட்டுப் பாதிரிகளைக் கண்டு பயப்பட வேண்டியதில்லை. எந்த விஷயத்தில் பயமடைய வேண்டும். அவர்களது வெள்ளை நிறத்தைக் கண்டா, அல்லது உடை முழுவதையுங் கண்டா, மோட்டார்வண்டியில் வருகிற காக்ஷியைக்கண்டா? தோற்றத்தில் மயங்காத ஞான வலிமைகொண்ட இந்தியர்கள் மயங்கமாட்டாரென்பது பிரத்தியக்ஷம். மற்றும் யாதொரு விஷயங்களுக்கும் நாம் பயப்படத் தேவையில்லை. ஆனால் நம் நாட்டுச் சோதியமைந்த மதஸ்தர்களிற் சிலருக்கு மதவிஷயமாய்த் தெரியாதிருப்பதற்குப் பேதபுத்தியின்றிப் புகட்டவேண்டும். எதை விட்டும், மதத்தை மட்டும் ஹிந்துக்கள் யாவரும் உயிரைக் கொடுக்கத்தயார். மதத்தைமட்டும் விடத்தயாராகவில்லை. இந்தியாவில் எங்கு பார்த்தாலும் மதவிஷய எண்ணங்களும் பகவானது ஞான விசேஷப் பேச்சுக்களும் ஜீவகாருண்ய நடவடிக்கைகளும் நிரம்பிக் கிடக்கின்றன. இந்த ஆங்கில ராஜாங்கம் வந்தபின் தான் இந்தியர்கள் ராஜ்ய விஷயங்களில் தலையிட்டார்கள். ராஜீய விஷயங்களிற்றலையிடாது சதா பகவத்தியான பரர்களாய் முறகாலங்களில் சிறிது நாள்முதல் வரை இந்தியர்கள் இருந்தனர். நமக்கு இராஜீய விஷயங்கள் பிரமாணமல்ல. மதமே பிரமாணம். நமதுநாட்டில் தாழ்ந்த வகுப்பார்களிற் சிலர் அன்னியமதக் குழியில் விழுந்து விட்டார்கள். நாம் எந்த மதஸ்தர்களுக்கும் வலியப்போதித்து நமது மதத்திற்கு அழைப்பதில்லை. ஒரு சமயம் இந்தியாவிலுள்ள 5 கோடி பஞ்சமர்கள் ஆசையில் மயங்கிக் கிறிஸ்தவ

மதத்திற்சேரும்படி சூழ்ச்சி செய்யப்படலாம். அதற்கு நாம் செய்துவிடவேண்டிய முக்கியமான வேலை என்னவென்றால், ஒவ்வொரு பஞ்சமனுடைய இருதயத்திலும் ஹிந்துமதச்சுடர் விளங்கும்படி செய்துவிடவேண்டும். ஹிந்துக்களில் பிராமணன், க்ஷத்திரியன், வைஸ்யன், சூத்திரன், ஸ்திரீகள், பஞ்சமன் என்ற பேதங்களை இன்றிருந்து அடியோடு விட்டுவிட முயலுங்கள்; நாம் பஞ்சமர்களைத் தாழ்வாக நினைக்க நினைக்க அன்னியமதஸ்தர்கள் நம்மை ஜெயிக்க இடங்கொடுத்து விடுகிறது. நமது ஹிந்து மதஞானிகளில் ஆதிகாலங்களில் பஞ்சமர்கள் அநேகரிருந்திருக்கிறார்கள். நந்தனார், திருப்பாணாழ்வார், கருவூரார் முதலிய மஹா அவதார புருஷர்களாகும் இப்படியிருக்கிற பஞ்சமர்களை இது காலம் வரை தாழ்த்தி நடத்தியதை நான் நினைக்க வருத்தமட்டுமல்ல, கண்ணீர் ஆறாய்ப்பெருகுகிறது. உயர்ந்த ஜாதியென்று பெயர் வைத்துக் கொண்டிருக்கிற நீங்களெல்லாம் அதிசீக்கிரமாய்ப் பஞ்சமர்களை வைதீகத்திலும் லௌகீகத்திலும் கைதூக்கிவிட முயலுங்கள். நமது ஹிந்துமதப் பஞ்சமர்களை லௌகிக விஷயத்தில் தூக்கிச்சிறிது பதவி உலக முழுமையுங் கொடுத்தருளிய கவர்ன்மெண்டாருக்கு நாம் நன்றி காட்டுவோம். எந்த அபிப்பிராயத்தினால் இராஜமுதல்வர்கள் செய்திருந்தபோதிலும் வெளித்தோன்றிய அனுஷ்டானம் வரையில் நன்மையேயன்றித் தீமையல்ல. பல ஹிந்து-மேற்குலத்தார்கள் பஞ்சமர்களை லௌகீக காரியங்களில் உயர்த்தியதைக்கேட்டு வருத்தமடைகிறார்கள். அது பழைய காலவாசனா பலத்தாலாகையால் சிறிது காலஞ்சென்றால் அதுவும் மறைந்துவிடு மென்பதிற் சந்தேகமேயில்லை. எல்லாம் கடவுள் செயலாலே நடக்கிறது. நாமேன் அமெரிக்க நாட்டுப் பாதிரிகளது கிறிஸ்தவ மதப்பிரசாரத்தைத் தடுக்கவேண்டுமென்று சிலர் சொல்லக்கூடும். அப்போது நான் செய்கிற முயற்சியும் கடவுள் செயலல்லவோ என்றுநான்கேட்பேன். அப்படியே எல்லா விஷயத்திலும் சொல்பவர்களை முழுச் சோம்பேரிகளென்றே சொல்வேன். நாம் செய்கிற வேலைக்குக் கடவுள் கூலி கொடுப்பாரென்று மட்டும் ஒப்பலாம். நமது சாஸ்திரங்களில் ஜீவச் செயல்வேறு சிவச் செயல்வேறு என்று பிரிக்கப் பட்டிருக்

178405

கிறது. ஒவ்வொரு மனிதரும் தன்னாலானவரை நல்லமுயற்சி செய்யவேண்டுமென்று வேதம் கட்டளையிடுகிறது. எல்லாம் கடவுள் செயலாயிருக்கும்போது கட்டளையிடவேண்டியதில்லை. அதனால் நாம் முயற்சி செய்வது அவசியம் என்றேற்படு கிறது. முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் என்ற மூத்தோர் வாக்கே பிரமாணமாய்க்கொண்டு இந்துமதப் பிரசாரகவாள்கொண்டு, எதிர் வருகிற விரோதவான மதங்களைக்கண்டித்து விடவேண்டும் ஹிந்துமத விஷயத்திற்காக நான் உயிரைவிடத் தயாராயிருக்கிறேன் நமது மதம் ஒவ்வொரு காலங்களில் பலமின்றித் தத்தளிக்கும்போது கடவுள் ஆக்ஞா ரூப அவதார புருஷர்கள் திடீரென்று தோன்றி மதஸ்தாபனஞ்செய்து சென்றுவிடுவது வழக்கமாகவே இருந்துவருகிறது.

## அவதாரபுருஷர்கள்.

திரேதாயுகத்தில் நமது ஹிந்துமதம் தளர்வுற்றுத் துஷ்டர்கள் அதிகரித்த காலத்தில் ஸ்ரீராமனாகவும், துவாபரயுகத்துக் கடைசியில் மதம் வேறுபட்டுத் தருமங்கள் நிலைகுலைந்தகாலத்து ஸ்ரீகிருஷ்ணனாகவும், பீஷ்மராகவும், கலியுக ஆரம்பத்தில் நம்மாழ்வாராகவும், மூவாயிரம் வருஷங்களுக்கு முன் சமணமதம்வலுத்து நின்ற காலத்தில் திருஞானசம்பந்தராகவும், திருநாவுக்கரசராகவும் இரண்டாயிரம் வருஷங்களுக்குமுன் புத்தமதமும், நாஸ்திகமதமும், வலுத்து ஹிந்து மதம் தளர்வுற்ற காலத்துச்சங்கரராகவும், ஆயிரம் வருஷங்களுக்குமுன் நிரீஸ்வரவாதம் பரவிய காலத்து இராமனுஜராகவும், மற்றும் வித்யாரண்யர், வேதாந்த தேசிகர், மணவாளமாமுனி, ஆளவந்தார், கிருஷ்ணசைதன்யர், முதலிய அவதார புருஷர்கள் அவதாரஞ்செய்து அந்தந்தக் காலங்களிற் சீர்கேடாயிருந்த ஹிந்துமதத்தைப் பலமான வேத பாஷ்யத்திற்கு விஜய மடாலயஸ்தாபன சிஷ்யவர்க்கங்களாகிற அஸ்திவார பலங்களுடன் ஸ்தாபித்துவிட்டு மறைந்தனர் நமது ஹிந்துமதத்திற்கு மற்ற மதஸ்தர்களால் தாழ்வு வருங்காலத்தில் திடீரென்று ஓர் அவதாரபுருஷர் வருவாரென்பது திண்ணம். அப்படியே தற்போது கிருஸ்தவமதம் மேலிட்டு நமது மதத்தைத்

தொலைக்கஎண்ணி அதற்குவேண்டிய ஏற்பாடுகள் நடந்துவருகிறபடியால் ஓர் பெரிய அபாரசக்தியுள்ள அவதார புருஷர் வந்தே தீரவேண்டும். இனிப்பிறந்து முடியாது பிறந்தே தயாராயிருக்கவேண்டும். உலகத்தை ரக்ஷிக்கவேண்டிய ஓர் குரு மஹான் வருகிற காலம் மட்டும் பலர் பலபல விதமாய்ச் சொல்லுகிறார்கள். முஹம்மதியர், கிருஸ்தவர்கள், புத்தர் எல்லோரும் அவரவர்கள் மதத்தின் சார்பாகக் கடவுள் அனுப்புகிற அவதார புருஷன் வருகிறாரென்கிறார்கள். ஹிந்துக்கள் எங்கள் மதத்தை உத்தாரணஞ் செய்யவேண்டிய ஓர் அவதார புருஷர் வருகிறார். அதைப்பற்றி எங்கள் மதத்துமஹாமேதாவிகளும் சாஸ்திரங்களும் சொல்லுகின்றன வென்கிறார்கள். எங்கள் மதத்தை உத்தாரணஞ் செய்யும்பொருட்டு நபீ அவர்கள் அவதாரமாகி வருங்காலம் சமீபித்துள்ளதென்று குமாரான் வேதத்திற் கூறியிருப்பதாக முஹம்மதியர் சொல்லிவருகிறார்கள். எங்களது மதம் நெடுங்காலமாக மேலெழும்பவில்லை. அதன் விருத்தியை முன்னிட்டுப் புத்தமஹானே நேரே வருகிற காலம் நெருங்கிவிட்டதென்று புத்தமதஸ்தர்கள் கூறிவருகின்றனர். எங்கள் மதத்தைப் போதிக்கிறதற்குக் கடவுளே வரப்போகிறாரென்று ஏசுநாதர் சொல்லி இருக்கிறாரென்று கூறுகிறார்கள். இதைத்தவிர தியாசபிமதத்தார் எங்கள மதத்தின் சார்பாக ஓர் குரு வருகின்றாரென்று சொல்லுகிறார்கள். இப்படி ஒவ்வொரு மதஸ்தர்களும் அவரவர் மதச்சார்பினராக ஒவ்வொரு அவதார புருஷர் வருவாரென்று கூறியபடி ஐந்தாறு புருஷர்கள் வருவார்களென்பதை மட்டும் நான் நம்பவில்லை. ஆனால் பொதுவாக எல்லா மதத்தினருக்கும் உலகத்தில் பொதுவாக ஓர் ஈசுவராவதார புருஷர் வரப்போகிறாரென்பதை மறுக்க யாராலும் முடியாது, மேலோர்கள் எப்போதும் ஒரு சார்பாகவே இருக்க மாட்டார்கள். இவற்றின் இரகசியத்தை வரப்போகிற ஒவ்வொரு அனுபவங்களினாலும் கண்டுகொள்ளலாம். இனி நம் இந்து மதஸ்தர்கள் அமெரிக்கநாட்டுப் பாதிரிமார்கள் போதிக்கப்போகிற கிருஸ்தவ மதத்தில் மயங்கிவிடாதபடி வேண்டியவாறு இந்தியா முழுமையும் ஹிந்து மதப்

பிரசாரகஞ் செய்து மதத்தையுடைய மனிதர்களை அசையவி டாது பலப்படுத்திவிடவேண்டும்.

## அதன் விஷயமான வேலை.

### முக்கிய கவனிப்பு

இந்தியா முழுதும் ஒவ்வொரிடங்களில் பலப்படுத்த வேண்டி அவ்வவ்விடங்களில் ஹிந்துமதத்தின் பூர்ணபாகங்களைப் பலபலபாகங் களாகப்பகுத்து விவரமாக அந்தந்தத் தேசபாஷை களைக்கொண்டே ஆங்கில பாஷையின் கலப்பின்றி ஹிந்துக்களுக் குப் போதித்துவிடவேண்டும். ஒவ்வொருஊரிலுள்ள விற்பன் னர்களும் விஷயந்தெரிந்தவர்களும் அவ்வூரிலுள்ள எல்லா ஜனங் களுக்கும் இவ்விஷயத்தை எடுத்துச்சொல்லி மதப்பற்றுடையவர் களாகச் செய்துவிடவேண்டும் பஞ்சமர்களுக்கே அதிகம்போதிக் கப்படவேண்டும். அந்தவிஷயமான பிரசாரஞ் செய்ய வுத்தே சித்துச்சென்னை ராஜதானியில் திருநெல்வேலி, மதுரை, இராமநாத புரம், திருச்சினாப்பள்ளி, தஞ்சாவூர், தென்னாற்காடு, வடஆற்காடு, சித் தூர், செங்கற்பட்டு, சென்னை, சேலம், கோயமபுத்தூர், நீலகிரி, மலை யாளம், முதலிய ஜில்லாக்களிலும் மைசூர், திருவாங்கூர், கோச்சி, புதுக்கோட்டை முதலிய சமஸ்தானங்கள் இவைகளிலும் ஹிந்து மதப் பிரசாரகஞ் செய்வதற்கு நிச்சயித்து ஹிந்துமத விஷயம் நன்றாகத் தெரிந்தவர்களும் தைரிய முடையவர்களும் போதனு சக்தி உள்ளவர்களும் ஆகச்சுமார் நூறு பெயர் சன்னியாசிகளும் கிரகஸ்தர்களுமாகத் தயார் செய்யப்பட்டு வருகிறது. அதற்கு வேண்டிய மற்றச் சகாயங்களும் தயாரித்து இருக்கின்றன. கூடியசீக்கிரம் முன்னாடியே துண்டுப் பிரசுரங்களை முன்சொன்ன எல்லைக்குள் பரப்பிவிடப் போகிறார்கள், கடைசியில் லக்ஷக் கணக்கான புஸ்தகங்களும் வெளிப்புறப்படப் போகின்றன. 1921-ம் வருஷமுதலாக நூறு பிரசாரகர்களும் பாகஞ்செய்து அவரவர்கள் எல்லைக்குள் போதிப்பதற்குப் புறப்படுவார்கள். அதற்குள் முன்னறிக்கை எல்லோருக்கும் புலப்படும்படியாகத் துண்டுப் பிரசுரங்கள் புஸ்தகங்கள் மூலமாயும் பத்திரிகைகளின் மூலமாயும் பகிரங்கப்படும்படி செய்துவிடுவார்கள். அப்பால்

கடைசியில் முறையாக எல்லைகட்டினவரையுள்ள இடங்களில் முக்கியமான இடங்களுக்கு அநேக கூட்டத்துடன் சென்று குறித்த நாளைக்குள் பிரசாரக வேலைகளை முடித்துவிட்டுத் திரும்புவோம்.

## தீரம்.

ஹிந்து மதத்திற்கு எதிரிடையாய்த் தோன்றி மதவிஷயத்தில் போதிக்க வரப்போகிற அமெரிக்க நாட்டுப் பாதிரிமார்களை இந்தியாவிற்கு வரவொட்டாமல் தடுக்க நம்மிடத்தில் அதிகாரமில்லாதது விசனிக்கத் தக்கது. ஆயின் மைசூர், திருவாங்கூர், பரோடா, நைஸாம் முதலிய சுதேச அரசர்கள் தமது இராஜ்ஜியத்திற்குள்வராது தடுக்கலாம். இந்த விஷயம் மதவிஷயத்தைப் பொருததாகையால் அதைப்பற்றி ஒவ்வொரு இந்தியனும் அதிக முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியமென்று ஏற்படுகிறது. மதத்தைப் பறிகொடுத்து விட்டு நாமிருந்தென்ன போயென்ன. பாரத நாட்டிலுள்ள எல்லோருடைய இருதயங்களிலும் உறங்கிக்கிடக்கிற ஆத்ம சக்தியைப் பிரயத்தனத்தால் எழுப்பி விடவேண்டும் எங்கு பார்த்தாலும் மதவுணர்ச்சி தோன்றும்படி செய்யவேண்டும். எது நழுவினாலும் மதம்மட்டும் நழுவாதபடி தீரமாயிருக்கவேண்டும். மதவிஷயங்களிற் பிரவேசித்து வேலைசெய்கிற நாம் திடீரென்று ராஜீய விஷயங்களில் தலையிடக்கூடாது. நமக்கு நமது ஹிந்து மதம்நிலைக்கவேண்டிய உத்தேசத்தைத்தவிர ராஜாங்கத்தைப்பற்றி யாதொரு கவலையுமில்லை. மதத்தையும் அதிகாரத்தையும் பிரிக்கமுடியாது என்று **ஸ்வாமி ராம தீர்த்தர்** சொல்லியிருக்கிறார். இதுவரை ஹிந்துக்கள் 3 கோடி பேர்கள் கிருஸ்தவமதத்திற்சேர்ந்து விட்டார்கள். முகம்மதியர்கள் ஒருவராவது அந்தமதத்திற்குப் போனதாக இதுவரை இல்லை இதை நோக்கும்போது முகம்மதியர்களுக்குள்ள மதக்கட்டுப்பாடு நமது மதத்திற்குக் காணதென்றே நினைக்கவேண்டியிருக்கிறது. முன்காலத்தில் நமது நாடு எல்லா விஷயத்திலும் மேல்பட்டிருந்ததென்று இப்போது கூறிற்பிரயோஜனமில்லை. ஆதிகால விஷயங்களெல்லாம் சொற்பனமாகக் கருதவேண்டிய காலம்வந்து

விட்டது ஆசாரங்கள் பலபலவிதமாய் மாறிவிட்டன. எதார்த்தம் தத்தளிக்கிறது. கடமை என்பது எல்லையிற்காணோம். ஆதிகாலங்களில் அன்னிய சமுத்திர மத்தியிலிருந்து ராக்ஷதர்கள் வந்து இந்தியாவிலுள்ள ஸ்திரீகள் செல்வம் இவைகளைக்கொள்ளையடித்துப் போனதாகச் சரித்திர மூலமாகக்கேட்டிருக்கிறோம். அதுபோலச் சமுத்திரத்திவிலுள்ள மேற்கு நாட்டார்கள் என்ற ராக்ஷதர்கள் இதுவரை மதத்தைக்கொள்ளைகொண்டனர். மற்றுமிருப்பதையும் கொண்டுபோக வருகின்றார்களாம். இதைப் பார்க்கும்போது ஓர் தேஜோமயத்திவ்விய புருஷனை நம் நாடு எதிர்பார்க்குங்காலமாயிருக்கிறது. இனி நாம் முக்கியமாய் அனுஷ்டிக்கவேண்டிய முறைகளை எதார்த்தமாகக் கூறவாரம்பம்.

## இதோபதேசம்.

எல்லோரையும் சமமாகக்கருதுங்கள். ஹிந்து மதத்தைக்காட்டிலும் மேலானமதம் ஒன்றிருக்கிறதாக எண்ணாதீர்கள் ஜனன மரணத்தை யொழிக்கவேண்டிய பகவானைவிரும்பி அடையுங்கள். ஈஸ்வரபக்தி செய்யுங்கள். சுத்தமான செய்கை; நினைப்பு, ஆகாரம் இவைகளை உபயோகியுங்கள். மதப்பேயை விட்டொழியுங்கள். அமெரிக்கநாட்டுப் பாதிரிகள் செய்யப்போகிற கிருஸ்தவமதப் பிரசாரகத்தில மயங்கிவிடாதீர்கள். பலருக்கும் இதைப்பற்றிப் போதித்து உறுதிப்படுத்திவையுங்கள். நீங்கள் யாவருமொன்றாயிருங்கள். ஏசுநாதரை மஹானென்னுங்கள். வருகிற அமெரிக்கா நாட்டுப்பாதிரிமார்களை தூஷிக்காதீர்கள். அவர்கள் போதனைக்குமட்டுமாளாகாதீர்கள் கிருஸ்தவ மதத்தைக் கன்னியமாகக்கருதுங்கள். ஹிந்துமத இஸ்லாமத ஒற்றுமையைப் பலப்படுத்துங்கள். ஒருவருக்கும் விரோதமான காரியத்தைச்செய்யவும் நினைக்கவுந்துணியாதீர்கள். உபதேசமொழிகள் ஜீவனுக்கென்றெண்ணுங்கள். ஞானமடையுமிச்சையை திடமாய்க்கொள்ளுங்கள். ஆதிகால வழக்கங்களை ஞாபகத்துக்குக்கொண்டுவந்து அனுஷ்டானத்தில் காண்பியுங்கள். தற்கால நாகரீக வழக்கங்களைச் சிறிது சிறிதாக விடமுயலுங்கள். ராஜத்துவேசமான காரியங்களில் தலையிடாதீர்கள். யாரையுந்தாழ்வாக நினையாதீர்கள்

ஹிந்துமத ஸ்தாபனத்தின் பொருட்டு உடல், பொருள், ஆவியைக்கொடுக்கத் தயாராயிருங்கள். எப்போதும் யாரிடத்திலும் மத விரோதம் பாராட்டாதீர்கள். வெகுதீரமான மனத்துடனிருங்கள் உடம்பு திடீரென்று விழும்வரை மதாபிமானிகளாகவே இருங்கள். சரீரத்தைத்துண்டு துண்டாக வெட்டினாலும் அசையாதீர்கள். நாஸ்திகரையும் தூஷிக்காதீர்கள். பாரத மாதாவைப் பந்தத்தினின்று விடுபடுத்தவாரம்பியுங்கள். பாரததேவிக்கு ஆலயஞ்செய்து ஆராதியுங்கள். உள்ளும்புறம்பும் சுத்தமாயிருங்கள். மேற்கு நாட்டு நாகரீகத்திற்கு விலகியிருங்கள். எல்லாச்சுதந்தரத்தையும் பகவானிடம் விட்டுவிடுங்கள். உங்களுக்குத்தக்கவாறு நன்மை செய்யுங்கள். அடியார்களிடம் பயபக்தியுடனிருங்கள். ஹிந்துக்களது பெருமையைப்பரவச்செய்யுங்கள். அன்னிய மதபோதனைகளை நமது மதக்கோட்டைக்குள் நுழையவிடாதீர்கள். கூடிய சீக்கிரம் ஓர் அவதாரபுருஷர் வருவாரென்பதை நிச்சயமாக நம்புங்கள். ராஜாங்கத்தாரைப் பெருமைப்படுத்தியே பேசுங்கள். வைதீகர்களைக்கண்டு தெரிசனம் செய்யுங்கள். அசட்டு வழக்கங்களையும் பயத்தையும் விட்டொழியுங்கள். எற்றத்தையும் இரக்கத்தையும் எண்ணி வருந்தாதீர். ஞானப்பேச்சை வாயில்மட்டும் பேசாமல் அனுபவத்துக்குக் கொண்டுவர முயலுங்கள். ஹிந்துவகுப்பார்களில் யாரையும் பேதம்பாராமல் எல்லா விஷயத்திலும் சரியாய் நடத்துங்கள். ஹிந்துமத அகண்ட நோக்கத்துடனிருங்கள். குறுகினமத நோக்கங்களை அடியோடு விட்டுவிடுங்கள். உள்ளதை உள்ளவாறு மதவிஷயத்தில்மட்டும் உபயோகியுங்கள். உலக விஷயங்களில் கபடமில்லாமல் வெல்ல முடியாதென்பதை நம்புங்கள். அதற்குச்சாக்ஷி கபடநாடகக் கண்ணபிரானே என்று கருதுங்கள். அவரவர்கள் சுதந்திரக் கடமையை விடாதீர்கள். ஒவ்வொருவர்களுக்கும் மேலானவர் கடவுளென்றே எண்ணுங்கள். கடவுளுக்கு மேலான வஸ்து ஒன்றுமில்லையென்றெண்ணுங்கள்.

## முடிவு.

இந்தப்புஸ்தகத்தை முழுதும் படித்துப் பார்த்தவனுக்கு
ஓர் விதமதவுணர்ச்சி புதிதாக உண்டாகுமென்பதிற் சந்தேகமே
இல்லை. இதைப்படித்தவர்கள் இந்தப் புஸ்தகத்திலுள்ள விஷ
யங்களை நமது மத ஜனங்களுக்குப் போதிக்கவேண்டும். அச்
சிட்டுப்பரவச்செய்யச் சக்தியுள்ளவர்கள் புஸ்தகத்தின் ஆசாரி
யரின் அனுமதியின்றி அச்சிடலாம். ஒவ்வொரு கிராமங்களி
லுஞ்சென்று தாழ்ந்தஜாதியார்களுக்கு மதவிஷயத்தை நன்றாகப்
போதிக்கவேண்டும். தங்களால் ஆனவரை நமது மதத்திற்கு
உழைக்கவேண்டும். அமெரிக்க நாட்டுப்பாதிரிகள் வந்து செய்
யப்போகிற கிறிஸ்தவ மதப்பிரசார வேலைகளில், ஹிந்தியர் மயங்
காதிருக்கும்படி வேண்டிய பல முயற்சிகள் அப்போதைக் கப்
போதுசெய்யவேண்டுமென்பதை அறிவுறுத்தவேண்டும். இதைப்
பற்றி ஒவ்வொரு ஹிந்தியனும் பலமாய்முயற்சி செய்யவேண்டும்.
ஹிந்துமதவிருத்தியின் பொருட்டு நற்காலம் பிறந்துவிட்டதென்
பதற்கு யாதொரு சந்தேகமும் இல்லை. ஓர்நன்மை உதயமாகு
முன் தீமையுதிப்பது வழக்கம். ஒளி உதயமாகுமுன் இருள்உதய
மாவது ஸகஜம், அதுபோல் நமது மதத்தின் பெரியநன்மை வரு
முன் முற்கூறிய தீமை உதயமாகப்போகிறது நன்மையே சர்வ
புவன ரக்ஷக ஈஸ்வரன் நமது முயற்சிகளுக்கு யாதொரு இடை
யூறும்வராமல் அருள் பாலிப்பாராக.

ஓம். தத். ஸத்.

---

(முற்றிற்று.)